இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 358 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 22 – திங்கள்கிழமை 07 ஆகஸ்ட் 2023 – திருச்சி★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 358: Thiruvalluvar Year - 2054 - Aadi 22 - Monday 07 August 2023 - Trichy★★ 16 Pages ₹ 5.00


# மீண்டும் ஒரு மொழிப்புரட்சியை உருவாக்கி விடாதீர்!



முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், காணொலிக் காட்சி வாயிலாக நேற்று முன்தினம் (05.08.2023) தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள், மாவட்ட கழகச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்குக் கடும் எச்சரிக்கை!

**சென்னை, ஆக. 7-**

**‘அனைவரும் இந்தியை ஏற்க வேண்டும்’ எனப் பேசியுள்ள ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.**

**அப்பதிவில் முதல்வர் அவர்கள், “தமிழ்நாடு ஒன்றும் தலையாட்டி பொம்மை மாநிலம் அல்ல; மீண்டும் ஒரு மொழிப் புரட்சிக் காலத்தை உருவாக்கி விடாதீர்!” என எச்சரித்துள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்தித் திணிப்பு குறித்த சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

‘எதிர்ப்பின்றி அனைவரும் இந்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும்’ என்ற உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பேச்சு, மற்ற மொழி பேசும் அனைத்து இன மக்களையும் இந்திக்குக் கொத்தடிமை ஆக்கும் எதேச்சதிகார முயற்சியாகும். இதைக் கேட்டு நடக்க தமிழ்நாடு, தலையாட்டி பொம்மை மாநிலம் அல்ல!

**பா.ஜ.க.வின் பசப்பு அரசியல்!**

தமிழ்நாட்டுக்கு வந்தால் ‘தொன்மையான மொழி’ என்று நாக்கில் தேன் தடவுவதும், டெல்லிக்குச் சென்றதும் நஞ்சைப் பரப்புவதும் பா.ஜ.க.வின் பசப்பு அரசியல் என்பதை அனைவரும் அறிவோம்.

இந்தித் திணிப்பை இப்போது மேற்கு வங்கமும், கர்நாடகமும் எனப் பல மாநிலங்களும் கடுமையாக எதிர்க்கத் தொடங்கி இருப்பதை மாண்புமிகு அமித்ஷா அவர்கள் உணர வேண்டும்.

1965 மொழிப்புரட்சிக் காலத்தை மீண்டும் உருவாக்கி விடாதீர்கள் என எச்சரிக்கிறேன்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### 3 மாதங்களுக்கும் மேலாக பற்றி எரியும்

## மணிப்பூரில் மீண்டும் கலவரம்! 3 பேர் பலி!

### பல இடங்களில் துப்பாக்கிச் சூடு - வீடுகளுக்கு தீவைப்பு!

*இம்பால், ஆக. 7-*

*மணிப்பூரில் மீண்டும் கலவரம் வெடித்துள்ளதால் பதற்றம் அதிகரித்துள்ளது. வீடுகளுக்கு தீவைப்பு உள்ளிட்ட சம்பவங்களில் 3 பேர் கொல்லப்பட்டனர்.*

*பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் மணிப்பூர் மாநிலத்தில் பெரும்பான்மையாக உள்ள மெய்தி இன மக்கள், தங்களுக்கு பழங்குடியின அந்தஸ்து அளிக்க வேண்டும் எனக் கோரி வருகின்றனர். ஆனால், இதற்கு குக்கி இன மக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டனர். கடந்த மே 3ஆம் தேதி, மணிப்பூரில் குக்கி பழங்குடியின மக்கள் நடத்திய பேரணியில் வன்முறை வெடித்தது.*

*இதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் வன்முறை பரவியது. இந்த கலவரங்களில் 200க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ள நிலையில், பெண்களை நிர்வாணப்படுத்தி இழுத்துச் செல்லப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள முகாம்களில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தஞ்சமடைந்துள்ளனர்.*

*மணிப்பூர் மாநிலம் 3 மாதங்களுக்கும் மேலாக வன்முறையால் பற்றி எரிகிறது. மணிப்பூரின் பிஷ்ணுபூர் மாவட்டத்தில் ஆயுதப் படைகளுக்கும் மைத்தேயி சமூகத்தினருக்கும் இடையே நடந்த மோதலில் 17 பேர் காயமடைந்தனர்.*

*இந்நிலையில் பிஷ்ணுபூரில் மீண்டும் வெடித்த கலவரத்தில் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற தீவைப்புச் சம்பவங்களில் பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பல இடங் களில் துப்பாக்கிச்சூடு நடந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இதன் காரணமாக ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்த பல்வேறு பகுதிகளில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. குறிப்பாக இம்பால் கிழக்கு மற்றும் இம்பால் மேற்கு பகுதிகளில் தளர்த்தப்பட்ட ஊரடங்கு திரும்பப்பெறப்பட்டுள்ளது. வன்முறை நிகழ்ந்த இடங்களில் மத்தியப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன.*

*இதனிடையே பிஷ்ணுபூர் மாவட்டத்தில் உள்ள இந்திய ரிசர்வ் பெட்டாலியன் தலைமையகத்திற்கு 40 வாகனங்களில் வந்த சுமார் 500 பேர் 298 ரைபிள் துப்பாக்கிகள், கைத் துப்பாக்கிகள், 327 சிறிய பீரங்கி குண்டுகள், 20 கையெறி குண்டுகள் உள்ளிட்டவற்றை கொள்ளை அடித்துச் சென்றனர்.*

*இதற்கிடையே, மணிப்பூர் வன்முறையால் பதற்றமான சூழ்நிலை நீடித்து வரும் நிலையில், ஆகஸ்ட் 21ம் தேதி சட்டப்பேரவை கூட்டம் நடைபெறும் என அம்மாநில அரசு அறிவித்துள்ளது.*

## உறுதுணையாக இருந்த நாட்டு மக்களுக்கு நன்றி!

### டெல்லியில் ராகுல் காந்தி பேட்டி!

**புதுடெல்லி, ஆக. 7 -**

**எம்.பி. பதவியில் இருந்து நீக்கப்பட்ட விவகாரத்தில் உறுதுணையாக இருந்த நாட்டு மக்களுக்கு நன்றி என்று ராகுல் காந்தி கூறியுள்ளார்.**

அவதூறு வழக்கில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து சூரத் கோர்ட்டு தீர்ப்பளித்தது.

இதைத் தொடர்ந்து ராகுல் காந்தியின் எம்.பி. பதவி பறிக்கப்பட்டது.



இந்த தீர்ப்பை குஜராத் உயர்நீதிமன்றம் உறுதி செய்த நிலையில், ராகுல் காந்தி உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

இந்த வழக்கு நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதி பி.எஸ்.நரசிம்மா, நீதிபதி சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், ராகுல் காந்திக்கு சூரத் நீதிமன்றம் விதித்த 2 ஆண்டு சிறை தண்டனையை நிறுத்தி வைத்து உத்தரவிட்டனர்.

இந்த நிலையில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி டெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: –

எம்.பி. பதவியில் இருந்து நீக்கப்பட்ட விவகாரத்தில் உறுதுணையாக இருந்த நாட்டு மக்களுக்கு நன்றி. எனது கடமை என்ன என்பதில் நான் தெளிவாக இருக்கிறேன். உண்மை வெல்லும்; எனது பாதையில் நான் தெளிவாக இருக்கிறேன் என்று கூறினார்.

### தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை

# கொள்கைத் திருவிழாவாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஆக. 7-**

**“தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொள்கைத் திருவிழாவாகக் கொண்டாடுவோம்” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலியில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் உரையாற்றும்போது கூறினார்.**

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் ‘தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா’வினை மாநிலமெங்கும் எழுச்சியுடன் கொண்டாடுவது தொடர்பாக, மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

அதில் கழகத் தலைவர் ஆற்றிய உரை வருமாறு:-

நம்மை எல்லாம் ஆளாக்கிய தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்காகத்தான், இந்தக் கூட்டம் காணொலி மூலமாகக் கூட்டப்பட்டிருக்கிறது.

கழகத்தின் சார்பில் நடத்தப்பட வேண்டிய நிகழ்ச்சிகளின் விவரங்களை கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா அவர்கள் உங்களிடம் விளக்கினார். மாவட்டச் செயலாளர்களும், அணிகளின் செயலாளர்களும் இணைந்து நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**கழகத் தொண்டர்களுக்கு உற்சாகம் தரும் நிகழ்வுகள்!**

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை, அவருக்குப் புகழ் சேர்க்கும் விழாவாக - பெருமைச் சேர்க்கின்ற விழாவாகக் கொண்டாட வேண்டும். அதைவிட முக்கியமாக, அவரின் கொள்கைகளைப் பரப்புகிற விழாவாகக் கொண்டாட வேண்டும். மக்கள் பயன்பெறும் விழாவாகக் கொண்டாட வேண்டும். இதுபோன்ற விழாக்களின் மூலமாகதான் கழகத் தொண்டர்களுக்கு உற்சாகம் பிறக்கிறது. நமக்கு நாமே உணர்ச்சியை பெறுகிறோம்.

இவை வெறும் கொண்டாட்டமாக இல்லாமல், கொள்கைத் திருவிழாக்களாக இருக்கிறது! கழக நிகழ்ச்சிகள் மூலம் ஆண்டுதோறும் நம்மை தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி உணர்ச்சி கொள்ள வைத்தாரோ - அதுபோல தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையும் ஆண்டு முழுவதும் நடத்தி கழகத்தை எழுச்சி பெற வைக்க வேண்டும்.

அரசு சார்பிலும் விழாக்கள் நடத்தப் போகிறோம். அரசு சார்பில் நடத்துகிற நிகழ்ச்சிகளுக்கான பரிந்துரைகள் வந்திருக்கிறது. மூத்த அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அதற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்வார்கள்.

**மாவட்டச் செயலாளர்களின் பொறுப்பு!**

கழகத்தின் சார்பில், நாம் எழுச்சியோடு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். இதற்கு அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் தேவையான உதவிகளைச் செய்து, எல்லா மாவட்டங்களிலும் நிகழ்ச்சிகள் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றிய - நகர - பேரூர் - பகுதி அளவில் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி நிர்வாகிகளிடம் “கலைஞர் 100” நிகழ்ச்சி பற்றிப் பேசுங்கள். கழக நிர்வாகிகள் உற்சாகத்தோடு பங்கேற்பதை உறுதி செய்யவேண்டிய பொறுப்பு, மாவட்டச் செயலாளர்களான உங்களுக்குத்தான் இருக்கிறது.

**கலைஞரால் பயன்பெறாத தரப்பினருமுண்டோ!**

தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா என்று சொல்கிறோம் என்றால், அதுவும் தேர்தல் பரப்புரையில் ஒரு அங்கம்தான். தலைவர் கலைஞர் பெயரைச் சொல்லி பொதுமக்களின் கவனத்தை நம்மை நோக்கி ஈர்த்தாக வேண்டும். மக்களை ஈர்க்க கலைஞரே காந்தம்போல் நமக்கு உதவுவார். அவரால் பயன்பெறாத தரப்பினரே இல்லை. அதனால், அந்த அடிப்படையில் கொள்கை விழாக்களாக இவற்றை நடத்த வேண்டும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்